**சுருக்கம்**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - மேனாள் நீதியரசர் திரு. கே. சந்துரு, அவர்களுக்கு 2021-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் "டாக்டர் அம்பேத்கர் விருது" வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (கொடு.தடு 1)துறை

அரசாணை (ப) எண்: 7

நாள் :13.01.2022
பிலவ மார்கழி 29ம் நாள்
திருவள்ளுவராண்டு 2052

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.52, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 22.3.1995.
2. அரசாணை (ப) எண்.175, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள்.14.12.2021.
3. ஆதிதிராவிடர் நல ஆணையரிடமிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்.ஆ2/19482/2020, நாள் 17.12.2021.
4. செய்தி வெளியீடு எண்.92, நாள்.13.1.2022.

---

**ஆணை:-**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக தங்களை இணைத்துக் கொண்டு அம்மக்களின் முன்னேற்றத்திற்கு தொண்டு செய்து வரும் தமிழ்நாட்டை சேர்ந்த ஒருவருக்கு "டாக்டர் அம்பேத்கர் விருது" என்ற பெயரில் விருதும், நற்சான்றிதழும் ரூ.1,00,000/- (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) பரிசுத் தொகை மற்றும் 8 கிராம் தங்கப் பதக்கமும் வழங்குவதென முடிவு செய்து மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை பிறப்பிக்கப்பட்டு இத்திட்டம் ஆண்டுதோறும் அரசால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் டாக்டர் அம்பேத்கர் தமிழ்நாடு அரசு விருது பெறுவோருக்கு விருதுத் தொகையாக தற்போது வழங்கப்பட்டு வரும் ஒரு இலட்சம் ரூபாய் என்பதை இவ்வாண்டு முதல் ரூபாய் ஐந்து இலட்சமாக உயர்த்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி விருதாளருக்கு ரூ.5,00,000/- (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) விருதுத் தொகையும், 8 கிராம் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் வழங்கப்படும்.

த.பி.பா...

3, 2021-ஆம் ஆண்டிற்கான "டாக்டர் அம்பேத்கர் விருது" மேனாள் நீதியரசர் திரு.கே. சந்துரு அவர்களுக்கு வழங்க அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

**க. மணிவாசன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மேனாள் நீதியரசர் திரு. கே. சந்துரு அவர்கள்.
(ஆதிதிராவிடர் நல ஆணையர் மூலமாக)
ஆணையர், ஆதிதிராவிடர் நலம், சென்னை -600005.
மாவட்ட ஆட்சித்தலைவர், சென்னை மாவட்டம்
சம்பளக்கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600008.
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை-6000018/35
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல அலுவலர்,
சென்னை மாவட்டம்.
பொதுத் (பொது-1) துறை,சென்னை-600009.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை துறை, சென்னை-600009.
<u>நகல்</u>
நிதித் (ஆதி(ம)பந/வரவு – செலவு / பொது-II) துறை,சென்னை-600009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600009.
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-600009.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் தனிச் செயலர், சென்னை-600009.
உதிரி/இருப்புக்கோப்பு.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**தேர்வு நிலை பிரிவு அலுவலர்**